# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning


| Vol: 01 | Issue: 254 | 4 Pages | 17.4.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 254 | 4 பக்கங்கள் | 17.4.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## கனடாவில் இந்திய மாணவர் சுட்டுக்கொலை காருக்குள் பிணமாக கிடந்தார்



ஒட்டாவா: ஏப். 17

அரியானா மாவட்டம் சோனிபட் மாவட்டத்தை சேர்ந்தவர் சிராஜ் அந்தில் (வயது 24). இவர் கடந்த 2022ஆம் ஆண்டு உயர்படிப்புக்காக கனடா நாட்டுக்கு சென்றார். அங்கு அவர் எம்.பி.ஏ. படித்து முடித்த பின் ஒரு கம்பெனியில் வேலை பார்த்து வந்தார்.

சிராஜ் அந்தில் கனடா நாட்டின் வான்கூர் நகரில் வசித்து வந்தார். சம்பவத்தன்று இவர் தனது சொகுசு காரில் வெளியில் சென்றார்.

இந்த நிலையில் அவர் காருக்குள் துப்பாக்கி குண்டு பாய்ந்த நிலையில் ரத்த வெள்ளத்தில் பிணமாக கிடப்பதாக கனடா போலீசாருக்கு தகவல் கிடைத்தது.


இதையடுத்து போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை மேற்கொண்டனர்.

காரில் சென்றபோது அவரை மர்ம நபர்கள் சுட்டுக்கொன்று இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இருந்தபோதிலும் அவர் எப்படி இறந்தார் என்பது மர்மமாக உள்ளது. இது தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சிராஜ் அந்தில் உடலை இந்தியா கொண்டு வருவதற்கான முயற்சி நடந்து வருகிறது. இதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவரது குடும்பத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சிராஜ் அந்தில் சகோதரர் ரோஹித் கூறும்போது எனது அண்ணனுக்கு யாருடனும் பகை கிடையாது. எல்லோரிடமும் அவர் பாசமாக தான் பழகுவார். அவருடன் நான் தினமும் செல்போனில் பேசுவேன். சம்பவத்தன்று இரவு கூட நான் பேசினேன். அதற்குள் இப்படி நடந்து விட்டது என சோகத்துடன் தெரிவித்தார்.

## இஸ்ரேலை நோக்கி வந்த 80 ஈரான் பாலிஸ்டிக் ஏவுகணைகள் அழிக்கப்பட்டன: அமெரிக்கா



சிரியா, ஏப். 17

சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் மீது இஸ்ரேல் வான்தாக்குதல் நடத்தியதில் இரண்டு முக்கிய ஈரான் தளபதிகள் கொல்லப்பட்டனர். இதனால் ஈரான் பயங்கர கோபம் அடைந்தது. இஸ்ரேலுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் எனத் தெரிவித்திருந்தது. தெரிவித்தது போல் நேற்று டிரோன்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தியது.


முன்னதாக ஓர்முஸ் ஜலசந்தியில் போர்ச்சுக்கல் நாட்டு கொடியுடன் சென்ற சரக்கு கப்பலை ஈரான் ராணுவத்தின் கப்பற்படை வீரர்கள் சுற்றிவளைத்து சிறைப்பிடித்தனர். இந்த கப்பலில் இந்தியா, பிலிப்பினோ, பாகிஸ்தான், ரஷியா மற்றும் எஸ்டோனியா நாடுகளைச் சேர்ந்த ஊழியர்கள் இருந்தனர். இவர்களில் 17 பேர் இந்தியர்கள்.

இவர்களை மீட்பதற்கு இந்திய வெளியுறவுத்துறை முயற்சி மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில் நேற்று இந்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் ஈரானின் வெளியுறவுத்துறை மந்திரி அமிர்அப்டோலாஹியன் உடன் டெலிபோன் மூலம் பேசினார்.

அப்போது சிறைப்பிடித்து வைத்துள்ள கப்பலில் உள்ள 17 இந்தியர்களை உடனடியாக விடுவிப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினார்.

"சிறைப்பிடித்துள்ள கப்பல் தொடர்பான விவரங்களை நாங்கள் பின்பற்றி வருகிறோம். கப்பலில் உள்ள இந்தியர்களை இந்திய அரசின் பிரதிநிதிகளுடன் பேசுவதற்கு விரைவில் அனுமதிப்போம்" என ஈரான் மந்திரி தெரிவித்தார். அப்போது இந்தியர்கள் குறித்து ஜெய்சங்கர் தனது கவலையை தெரிவித்தார். மேலும், இது தொடர்பாக ஈரானிடம் உதவி கோருவதாகவும் தெரிவித்துள்ளார்.

## சிறைப்பிடிக்கப்பட்ட கப்பலில் உள்ள இந்தியர்களை இந்திய அதிகாரிகள் சந்திக்கலாம்: ஈரான்



இஸ்ரேல், ஏப். 17

இஸ்ரேல் ராணுவம் சிரியாவில் உள்ள ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பினர் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. அவர்களது இருப்புகளை கண்டறிந்து துல்லியமாக தாக்கி அழித்து வருகிறது. அந்த வகையில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியபோது எதிர்பாராத விதமாக சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் தாக்கப்பட்டது. இதில் இரண்டு ஈரான் தளபதிகள் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடி கொடுக்கப்படும் என ஈரான் தெரிவித்திருந்த நிலையில், நேற்று ஈரான் நேரடியாக டிரோன் மற்றும் ஏவுகணைகள் மூலம் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது. 300க்கும் மேற்பட்ட டிரான்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேல் ஏற்கனவே வான் எல்லைகளில் எதிரி ஏவுகணைகள் தாக்கி அழிக்கும் தொழில்நுட்பத்தை பயன்படுத்துகிறது. மேலும் ஈரான் தாக்குதல் நடத்தும் என எதிர்பார்த்ததால் அமெரிக்கா இஸ்ரேலுக்கு உதவி செய்தது.

இதனால் நேற்று நூற்றுக்கணக்கான ஏவுகணைகள், டிரோன் தாக்குதல்கள் நடத்தப்பட்ட போதிலும் இஸ்ரேல் சிறப்பாக எதிர்கொண்டு தடுத்ததாக கூறப்படுகிறது. இஸ்ரேலின் பாதுகாப்பு நடவடிக்கைக்கு தாங்கள் உதவியாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நேற்று தெரிவித்திருந்தார். இந்த நிலையில் ஈரானின் 80 பாலிஸ்டிக் ஏவுகணைகளை தாக்கி அழித்ததாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஈரான் மற்றும் ஏமனில் இருந்து ஏவப்பட்ட குறைந்தபட்சம் ஆறு பாலிஸ்டிக் ஏவுகணைகள், 80க்கும் மேற்பட்ட ஒரு வழி தாக்குதல் ஆளில்ல ஏரியல் வாகனங்கள் (OWA UAV) ஆகிய தடுத்து அழிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது.

மேலும், ஈரானின் தொடர்ச்சியான இதற்கு முன் எப்போதும் இல்லாத வகையிலான, மோசமான மற்றும் பொறுப்பற்ற நடத்தை பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் அமெரிக்க மற்றும் கூட்டணிப் படைகளின் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கிறது எனக் குறிப்பிட்டுள்ளது.

## தமிழ்நாட்டில் நாடாளுமன்ற தொகுதிகளை குறைக்க மோடி சதி: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பரபரப்பு எச்சரிக்கை

சென்னை, ஏப். 17

தமிழ்நாட்டின் நாடாளுமன்ற தொகுதிகளை குறைக்க பிரதமர் மோடி, பாஜக சதித்திட்டம் தீட்டியிருப்பதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குற்றம்சாட்டியுள்ளார். இதனால் தமிழ்நாட்டின் முக்கியத்துவம் நாடாளுமன்றத்தில் பறிக்கப்படுவதோடு மட்டும்மல்லாமல், நம் மாநிலத்தின் குரலுக்கு மதிப்பே இருக்காது என முதலமைச்சர் எச்சரிதுள்ளார். இதனால், தமிழ்நாட்டின் ஒப்புதல் இல்லாமலேயே மக்கள் விரோத சட்டங்கள் நம் மாநிலத்தில் மத்திய பாஜக அரசு நடைமுறைப்படுத்தும் என்றும் கூறியுள்ள அவர், இதனால் ஒட்டுமொத்த தமிழகமும் பெரும் பின்னடைவை சந்திக்கும் என்று தெரிவித்துள்ளார். அதனால் பாஜகவுக்கு வாக்களிக்கக்கூடாது, தமிழ்நாட்டில் போட்டியிடும் திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும் எனவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து எக்ஸ் பக்கத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டிருக்கும் பதிவில், " பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாட்டுக்கு ஏற்படப் போகிற பாரதூரமான பாதகம் தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் இந்தியாவின் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்துவது.

தமிழ்நாடு உள்பட மக்கள் தொகையைச் சிறப்பாகக் கட்டுப்படுத்திய மாநிலங்களைத் தண்டிப்பதற்கு போடப்பட்டிருக்கிற அச்சாரம்.

புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் 888 பேர் அமரக்கூடிய வகையில் மக்களவை இருக்கைகள் போடப்பட்டிருப்பது நம் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கிற கத்தி. மக்கள் தொகை கட்டுப்பாட்டைச் சிறப் பாகக் கடைப்பிடித்துள்ள மாநிலங்களுக்குத் தண்டனையும் கடைப்பிடிக்காத மாநிலங்களுக்கு இரு மடங்காக தொகுதிகளை உயர்த்துவதும் என்ன நியாயம்?, சிறப்பாகச் செயல்பட்டதற்காக நம்மை தண்டிப்பது ஜனநாயகத்துக்கு ஆபத்து இல்லையா!?, தமிழ்நாட்டின் கோரிக்கைகளை, உரிமைக் குரலை இப்போதே மோடி அரசு மதிப்பதில்லை. அடிப்படை உரிமைகளுக்காகக்கூட உச்ச நீதிமன்றத்தை ஒவ்வொரு முறையும் நாடும் நிலைக்குத் தள்ளப்படுகிறோம். இதில், மக்களவையில் நமது பிரதிநிதித்துவம் மேலும் குறைந்தால், தமிழர்களை பா.ஜ.க. அரசு செல்லாக் காசாக்கி விடும். வரிப்பகிர்வில் ஏற்கெனவே பாரபட்சமான அநீதியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். அரசியல் உரிமைகளைப் பறித்து, தமிழ்நாட்டின் அறிவார்ந்த குரலை ஒடுக்கி, இரண்டாம் தரக் குடிமக்களாக்கும் சர்வாதிகார மோடி ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்போம். மோடியின் பா.ஜ.க.வுக்கு வாக்களிப்பதற்கும், எடப்பாடி பழனிசாமியின் அ.தி.மு.க.வுக்கு வாக்களிப்பதற்கும் வித்தியாசம் ஒன்றும் இல்லை. ஒருவரும் வெற்றிபெற மாட்டார்கள். மக்களவையில் தமிழ்நாட்டின் பலத்தைக் குறைக்க மாட்டேன் எனத் தேர்தலுக்காகப் பொய்யாகக் கூட மோடி வாக்குறுதி கொடுக்க மாட்டார்.

இத்தனை வெளிப்படையாகத் தமிழ்நாட்டை அழிக்க நினைக்கும் பா.ஜ.க.வையும், அவர்களின் மறைமுகக் கூட்டாளிகளான அ.தி.மு.க.வையும் புறக்கணிப்போம். பாசிசத்தை வீழ்த்த ஜனநாயகத்தையும் தமிழ்நாட்டையும் காக்க க்ஷிஷீமீ மீ4மிழிஞ்மிகி! என கேட்டுக்கொண்டுள்ளார்.

## கல்லூரியில் புதிய பெண் வாக்காளர் விழிப்புணர்வு கருத்தரங்கு & உறுதிமொழியேற்பு

விக்கிரவாண்டி, ஏப். 17

விக்கிரவாண்டி வட்டம், ஒரத்தூர் கூட்டுரோட்டிலுள்ளOPR பெண்கள் கல்லூரியில் புதிய வாக்காளராக உள்ள மாணவியர்களிடையே விழிப்புணர்வு கருத்தரங்கு மற்றும் உறுதிமொழியேற்பு நிகழ்ச்சி கல்லூரி முதல்வர் கோ.வளர்மதி தலைமையில் நடந்தது. NSS ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் பிரியங்கா, . ஆங்கிலத்துறை பேராசிரியர். தி. ஏஞ்சலின் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த நிகழ்ச்சியினை நிர்வாகத்துடன் விழுப்புரம் கல்வி



மாவட்ட ஜூனியர் ரெட் கிராஸ் இணைந்து நடத்தியது. சிறப்பு அழைப்பாளராக முட்டத்தூர், ஒய்க்காப் மேனிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியரும், விழுப்புரம் ஜூனியர் ரெட் கிராஸ் மாவட்டக் கன்வீனர் முனைவர். ம.. பாபு செல்வதுரை கலந்துக்கொண்டு கருத்துரையாற்றினார். புதிய பெண் வாக்காளராக முதன் முதலில் வாக்களிக்கும்நீ ங்கள். நேர்மையுடனும், உண்மையுடனும். வாக்களிக்க வேண்டும்.வாக்களிப்பதை ஜனநாயக கடமையாக கருத வேண்டும், நாம் வாழும் பகுதியிலு ள்ள வயது முதிர்ந்த மற்றும் மாற்று த்திறனாளிகள் இருப்பின் அவர்களுக்கு வாக்கு மையத்திற்கு செல்ல உள்ளார்.

## இன்று ஓய்கிறது தமிழ்நாட்டின் மக்களவை தேர்தல் பிரச்சாரம்: வெளியூர்காரர்கள் வெளியேற்றம் உள்பட விதிமுறைகளை வெளியிட்டது தேர்தல் ஆணையம்

சென்னை, ஏப். 17

மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை மாலையுடன் நிறைவடையும் நிலையில் தேர்தல் ஆணையமானது விதிமுறைகளை வெளியிட்டது. நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் தமிழக மற்றும் புதுச்சேரியில் வருகிற 19ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெறுகிறது. இதற்கு இன்னும் ஒரு சில நாட்களை உள்ள நிலையில் நாளை மாலையுடன் தேர்தல் பிரச்சாரம் நிறைவடைகிறது. கடந்த சில வாரங்களாக தேர்தல் களம் சூடுபிடித்த நிலையில் நாளை மாலை 6 மணி முதல் ஏப்ரல் 19ஆம் தேதி வாக்குப்பதிவு நாள் வரை தேர்தல் விதிகளை தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி சத்ய பிரதா சாகு வெளியிட்டார். வாக்குப்பதிவு வரும் 19ஆம் தேதி காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும் ஊடகங்கள் ,பேஸ்புக் ,வாட்ஸ் அப் ,எக்ஸ் வலைத்தளம் போன்ற சமூக வலைத்தளங்கள் என எந்த வகையிலும் அரசியல் கட்சிகள் பிரச்சாரம் செய்யக் கூடாது. நாளை மாலை 6:00 மணிக்கு பிரச்சாரம் முடிந்தவுடன் தொகுதி சாராத வெளியூர் நபர்கள் அந்த தொகுதியை விட்டு வெளியேற வேண்டும், ஹோட்டல்கள் விடுதிகளில் வெளியூர் நபர்கள் இல்லை என்ற நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும்.தேர்தல் தொடர்பான கூட்டம் , ஊர்வலம் நடத்தவோ அதில் வேட்பாளர் பங்கேற்கவும் கூடாது. இசை மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகள் திரையரங்குகள் வாயிலாக பரப்புரை செய்யக்கூடாது . விதிமுறைகளை மீறுவோருக்கு மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

## திருச்சி - மதுரை வழியே வந்தே பாரத் கோடை ரெயில் சேவை

சென்னை, ஏப். 17

கோடைக்கால சிறப்பு வந்தே பாரத் எக்ஸ்பிரஸ்கள் இந்தியாவின் பல வழித்தடங்களில் அறிவிக்கப் பட்டு வருகின்றன. அந்தவகையில் தற்போது திருச்சி மதுரை வழியில் வந்தே பாரத் ரயில் இயக்கப்படவுள்ளதாக அறிவிப்பு வெளியாகிவுள்ளது.

மத்திய அரசின் இலக்கு 4,500 வந்தே பாரத் ரயில்களைக் கொண்டு வர வேண்டும் என்பதுதான். நாடு சுதந்திரம் அடைந்து நூற்றாண்டைத் தொடும்போது இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் வந்தே பாரத் ரயில்கள் இயக்க வேண்டும் என்பதே மத்திய அரசின் இலக்கு. இந்தத் திட்டத்துடன் தமிழகத்திற்கும் பல்வேறு சேவைகள் அறிமுகம் செய்யப்பட்டன.

இதில் சென்னை சென்ட்ரல் மைசூரு, சென்னை சென்ட்ரல் கோவை, சென்னை சென்ட்ரல் விஜயவாடா, சென்னை சென்ட்ரல் கோவை, சென்னை எழும்பூர் திருநெல்வேலி, கோவை பெங்களூரு கண்டொன்மென்ட் ஆகிய ரயில்கள் தெற்கு ரயில்வேயின் கீழும், மைசூரு சென்னை சென்ட்ரல் ரயில் தென்மேற்கு ரயில்வேயின் கீழும் இயக்கப்படுகின்றன.

இந்தநிலையில், கடந்த நிதியாண்டில் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் திட்டங்கள் குறித்து அவ்வப்போது பல்வேறு விவரங்களை ரயில்வே அதிகாரிகள் அறிவித்தனர். கடந்த ஆண்டில் வந்தே பாரத் ரயில்கள் பயணித்த அளவு என்பது பூமியை 310 முறை சுற்றியதற்கு சமமாகும் என்று ரயில்வே அதிகாரிகள் கூறுகின்றன.

தற்போது மொத்தம் 82 வந்தே பாரத் ரயில்கள் 100 வழித்தடங்களில் 24 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் வழியே 284 மாவட்டங்களை கடந்து செல்கிறது. வந்தே பாரத் ரயில்கள் அதிகவேகம், டெக்னாலஜி ஆகியவற்றுடன் விமானத்தைப் போன்ற பயண அனுபவத்தைத் தருவதாக பயணிகள் கூறுகின்றனர். 2019ம் ஆண்டிலிருந்து தற்போது வரை 2 கோடி பேர் வந்தே பாரத் ரயில்களில் பயணம் செய்திருப்பதாக ரிப்போர்ட் கூறுகிறது.

அடுத்தக்கட்டமாக ஸ்லீப்பர் வந்தே பாரத் ரயில்கள் தயாரிப்பு பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன.

இந்தநிலையில் தான் கோடைக்கால சிறப்பு வந்தே பாரத் ரயில்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே, சென்னை எழும்பூர் நாகர்கோவில் வழியாகத் துவக்கி வைக்கப்பட்டது.

தற்போது, தாம்பரம், விழுப்புரம், திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி வழித்தடங்களில் இயக்கப்படவுள்ளது. இந்த வந்தே பாரத் ரயில் வரும் ஏப்ரல் 19, 20, 21, 26, 27, 28 ஆகிய தேதிகளில் இயக்கப்படவுள்ளன. இதன் கட்டணம் 1,605 ரூபாயாகும். இப்போது 26 மற்றும் 28 ஆகிய தேதிகளில் மட்டும் டிக்கெட்டுகள் விற்கப்படாமல் இருக்கின்றன. இதன் கட்டணம் 3,245 ரூபாயாகும்.




சட்ட மேதை டாக்டர் அம்பேத்கரின் 134வது பிறந்தநாளை முன்னிட்டு மதுரை மாவட்டத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு பறையர் புலிப்படை சார்பில் மாவட்ட தலைவர் வி.மணிமாறன், மாநில தலைவர் மின்னல் வரதன் உள்ளிட்டோர் மாவட்ட மகளிர் அணியினர் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 505 மதுபாட்டில்களை போலீசார் பறிமுதல் செய்தனர்



கிருஷ்ணகிரி, ஏப். 17

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அறிவுறுத்துதலின் படி, தேன்கனிக்கோட்டை காவல் துறை கண்காணிப்பாளர் சாந்தி ஆலோசனைப்படி, கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பழையூர் கிராமத்தில் உள்ள கெளரி (55) க/பெ சரவணன் மற்றும் அவரது மகன் ரஃபி (32) த/பெ சரவணன் ஆகியோர்கள் விற்பனைக்காக பதுக்கி வைத்திருந்த மதுபான பாட்டில்கள் சுமார் 505 பாட்டில்களை (145 லிட்டர்) தேன்கனிக்கோட்டை காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் பேரில் எஸ்.ஐ டி.ஆர். ஜெய்கணேஷ், ஹெட் கான்ஸ்டபிள் பிரபாகரன், ராஜேஷ், காவலர்

சென்னப்பன் ஆகியார் கொண்ட குழு மேற்படி நபரின் வீட்டில் சோதனை செய்து பிடித்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரிகளும் இருவர் தலைமறைவு ஆகிவிட்டார்கள். தேன்கனிக்கோட்டை காவல் அதிகாரிகள் குற்றவாளிகளை தேடி வருகின்றனர்.

# நீலகிரி மாவட்டத்தில் 3 சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் பாதுகாப்பு பணி



ஊட்டி, ஏப். 17

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2024ஐ முன்னிட்டு, 19 நீலகிரி (தனி) பாராளுமன்ற தொகுதிக்குபட்பட்ட 108உதகமண்டலம், 109 கூடலூர் (தனி) மற்றும் 110குன்னூர் ஆகிய 3 சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் காவலர்களை சீரற்ற மயமாக்கல் பணிகள் தேர்தல் காவல் பார்வையாளர் பிரதாப் கோபேந்திர யாதவ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெலெக்டர் மு.அருணா முன்னிலை வகித்தார்.

இந்திய தேர்தல் ஆணையம் எதிர்வரும் 19.04.2024 பாராளுமன்ற பொதுத்தேர்தல் வாக்குப் பதிவு நடைபெறுவதாகவும், தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்படுவதாகவும் அறிவித்ததை தொடர்ந்து, தேர்தல் தொடர்பான பணிகளும், வாக்களிப்பதன் அவசியம் குறித்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளும் நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தல், 2024 ஐ முன்னிட்டு, 19நீலகிரி (தனி) பாராளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட 108உதகமண்டலம், 109 கூடலூர் (தனி) மற்றும் 110குன்னூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் 374 வாக்குச்சாவடி அமைவிடங்களில் அமைந்துள்ள 689 வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் காவலர்களை சீரற்ற மயமாக்கல் பணிகள் நடைபெற்றது. மேலும், 19நீலகிரி (தனி) பாராளுமன்றத் தொகுதியில் 176 பதற்றமான வாக்குச்சாவடிகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த வாக்குச்சாவடி மையங்களில் மத்திய பாதுகாப்பு படையினர், மாநில காவல் துறையினருடன் இணைந்து பாதுகாப்பு பணியில் ஈடுபட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் உதகை பிரிக்ஸ் பள்ளியில் வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தப்படும் தேர்தல் தொடர்பான பொருட்கள் வைக்கப்பட்டதையும், சாந்தி விஜய் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை மற்றும் பாதுகாப்பு வசதிகள் குறித்து நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். முன்னதாக, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் வாக்கு எண்ணும் மையமான உதகை அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்று வரும் பாதுகாப்பு பணிகளை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவடிவேல், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், உதவி தேர்தல் அலுவலர் /வருவாய் கோட்டாட்சியர் மகராஜ் (உதகை), பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ரமேஷ், உதகை நகராட்சி ஆணையாளர் ஏகராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) சுரேஷ் கண்ணன், தேர்தல் வட்டாட்சியர் .சீனிவாசன், உதகை வட்டாட்சியர் சரவணகுமார் உட்பட பலர் உள்ளனர்

# தேனி மாவட்ட கலெக்டர் தலைமையில் 100 கி.மீ. தூரம் நடைபயண பேரணி 95 கி.மீ தூரம் எட்டியது

தேனி, ஏப். 17

33.தேனி பாராளுமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் 100% வாக்களிப்பை பதிவு செய்வதற்காக பல்வேறு விதமான விழிப்புணர்வு பணிகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு இடங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, ஒவ்வொரு நாளும் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட கலெக்டர் தலைமையில் 100 கி.மீ. நடைபயண பேரணி நடத்த திட்டமிடபட்டு நேற்று வரை 9 நாட்களில் 85 கி.மீ தூரம் நிறைவுபெற்றது.

பத்தாம் நாளாக இன்று பெரியகுளம் பகுதியில் 10 கி.மீ தூரம் விழிப்புணர்வு நடைபயண பேரணி மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்றது.

இப்பேரணி தாமரைக்குளம் பேரூராட்சி அலுவலகம் முன்பு தொடங்கி, புத்தர் பள்ளி, மகாத்மா காந்தி ரோடு, சாஸ்திரி நகர், தென்கரை பேரூராட்சி தண்ணீர்துரை நகர், வ.உ.சி. நகர், முத்தாலம்மன் கோயில், பாரதிதாசன் தெரு, நேதாஜி தெரு, வழியாக லெட்சுமிபுரம் ஊராட்சி வரை சென்று நிறைவு பெற்றது. இப்பேரணி நாளை காலை 6.00 மணி அளவில் வடபுதுப்பட்டி, ஊஞ்சாம்பட்டி, அன்னஞ்சி, பொம்மையகவுண்டன்பட்டி, தேனிஅல்லிநகரம் நகராட்சி பகுதிகளில் நடைபெற உள்ளது.

இப்பேரணியில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெயபாரதி, மாவட்ட தேர்தல் விழிப்புணர்வு முதன்மை அலுவலர் ரூபன் சங்கர் ராஜ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மழையிலும் மக்களிடம் அரசின் கொள்கைகளை கூறி வாக்கு கேட்ட மாவட்ட செயலாளர் சிவ பத்ம நாதன்



தென்காசி, ஏப். 17

தென்காசி நாடாளுமன்ற தொகுதி கீழப்பாவூர் மேற்கு ஒன்றியம் அரியப்பபுரம் ஊராட்சி நாடாக்கண்ணுப்பட்டி சீதாராமன் பட்டி குமாரசாமிபுரம் மேல லட்சுமி பட்டி வெள்ளப்பணி ஏரி பட்டி காமராஜர் நகர் உள்ளிட்ட பகுதிகளில் கழக வேட்பாளர் ராணி ஸ்ரீகுமார் அவர்களை ஆதரித்து வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்த போது நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் சிவ பத்மநாதன் கலந்து கொண்டு இல்லம் தோறும் சென்று வாக்கு சேகரித்தார் நிகழ்ச்சியில் ஒன்றிய கழகச் செயலாளர் சீனித்துரை ஊராட்சி மன்ற தலைவர் தினேஷ்குமார் ஒன்றிய கவுன்சிலர் வழன் ராஜா ஆகியோர் முன்னிலையில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சியில் மாவட்ட தொண்டர் அணி தலைவர் வெங்கடேஷ் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் சுப்பிரமணியன் ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் மேசியா ஜெய் சிங் ஒன்றிய கவுன்சிலர் தர்மராஜ் சிவன் பாண்டியன் ரூபன் மலபார் பாக்யராஜ் அருணா பாண்டியன் கிளைக் கழக நிர்வாகிகள் செந்தூர் முருகன் சந்திரசேகர் முருகன் தளவாய்சாமி பொன் பாண்டியன் ஆறுமுக பாண்டியன் சண்முகசுந்தர்ராஜ் சங்கு கிருஷ்ணன் ராஜேந்திரன் பூதத்தான் அப்துல் சேட் பால்சிங் மகாலிங்கம் சோனா செல்லம் சுப்பிரமணியன் கணேசன், மதி தளபதி முருகன் சொரிமுத்து பொன்னுச்சாமி பொன்செல்வன் ஈஸ்டர் துரைராஜ் கொதிகாசலம் ரயில்வே பிரம்மநாயகம் மகளிர் அணி நிர்வாகிகள் மாரி ச்செல்வி கலா ஜெயா சாந்தி கவிதா லதா சுகந்தி சித்ரா உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு இல்ல தோறும் சென்று உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டனர்

# மயிலாடுதுறை மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மயிலாடுதுறை பாராளுமன்ற தேர்தல் தபால் வாக்கு பணிகள்: கலெக்டர் நேரில் ஆய்வு



மயிலாடுதுறை, ஏப். 17

மயிலாடுதுறை மாவட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மயிலாடுதுறை பாராளுமன்ற தேர்தல் தபால் வாக்கு பணிகளை மாவட்ட கலெக்டர், மாவட்ட தேர்தல்; அலுவலர் ஏ.பி.மகாபாரதி பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

பின்னர், மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

இந்திய தேர்தல் ஆணையம் பாராளுமன்ற பொதுத்தேர்தலுக்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதன்படி மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதி தேர்தல் எதிர்வரும் 19.4.2024 அன்று நடைபெற உள்ளது. 4.6.2024 அன்று பதிவான வாக்குகள் எண்ணப்படும். மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதியில் மயிலாடுதுறை மாவட்டத்தில் அடங்கியுள்ள 160சீர்காழி (தனி), 161 மயிலாடுதுறை, 162 பூம்புகார் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 170 திருவிடை மருதூர் (தனி), 171 கும்பகோணம் மற்றும் 172பாபநாசம் ஆகிய ஆறு சட்டமன்ற தொகுதிகள் அடங்கி உள்ளது. இத்தேர்தலில் 17 வேட்பாளர்கள் போட்டியிட உள்ளனர்.

மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதியில் சீர்காழி சட்டமன்ற தொகுதியில் 1,22,727 ஆண் வாக்காளர்களும், 1,25,660 பெண் வாக்காளர்களும், 11 மூன்றாம் பாலினத்தவர்களும், மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதியில் 1,16,611 ஆண் வாக்காளர்களும், 1,18,948 பெண் வாக்காளர்களும், 10 மூன்றாம் பாலினத்தவர்களும், பூம்புகார் சட்டமன்ற தொகுதியில் 133264 ஆண் வாக்காளர்களும், 137454 பெண் வாக்காளர்களும், 3 மூன்றாம் பாலினத்தவர்களும், திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதியில் 129763 ஆண் வாக்காளர்களும், 132931 பெண் வாக்காளர்களும் , 12 மூன்றாம் பாலினத்தவர்களும், கும்பகோணம் சட்டமன்ற தொகுதியில் 130162 ஆண் வாக்காளர்களும், 137298 பெண் வாக்காளர்களும் , 15 மூன்றாம் பாலினத்தவர்களும், பாபநாசம் சட்டமன்ற தொகுதியில் 127410 ஆண் வாக்காளர்களும், 133268 பெண் வாக்காளர்களும், 21 மூன்றாம் பாலினத்தவர்களும் ஆக மொத்தம் 15,45,568 வாக்காளர்கள் உள்ளனர்.

இத்தேர்தலில் பணியாற்றுகின்ற பிற மாவட்டங்களைச் சேர்ந்த அரசு அலுவலர்கள் தபால் வாக்களிக்க ஏதுவாக படிவம் 12 பிற மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டது. அதன்படி, 1437 வாக்காளர்களுக்கு தபால் வாக்கு கோரி பிற மாவட்டங்களுக்கு படிவம் 12 அனுப்பப்பட்டது.

இதுவரை 1290 தபால் வாக்குகள் பதிவாகியுள்ளது. மீதமுள்ள வாக்குகள் தபால் வாக்குகள் பெறப்பட்டு வருகிறது. மேலும், 85 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் வீட்டில் இருந்தபடியே தபால் வாக்களிக்கும் வசதி தேர்தல் ஆணையத்தால் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி, 85 வயதிற்கு மேற்பட்ட 1748 வாக்காளர்களும், 1076 மாற்றுத்திறனாளி வாக்காளர்களும், வாக்களித்துள்ளனர். இத்தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவினை எட்டுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வாக்காளரும் அவர்களது வாக்கினை தவறாது செலுத்தி ஜனநாயக கடமையாற்ற வேண்டும் என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

முன்னதாக, மாவட்ட கலெக்டர் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அரசு அலுவலர்களின் தபால்; வாக்குகள் பெறப்பட்ட எண்ணிக்கை விவரங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் மு.மணிமேகலை, மாவட்ட வழங்கல் அலுவலர் பானுகோபன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) செல்வம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்து வடிவேல் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரியும் காவலர்களை கணினி குலுக்கல் முறையில் தேர்வு செய்து ஒதுக்கீடு செய்யும் பணிகள்



இராணிப்பேட்டை, ஏப். 17

அரக்கோணம் பாராளுமன்ற பொதுத் தேர்தல் காவல் பார்வையாளர் சத்யத்ஜித் நாயக், முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இராணிப்பேட்டை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் ச.வளர்மதி எதிர்வரும் 07. அரக்கோணம் பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2024 வாக்கு பதிவு நாளன்று வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரியும் காவலர்களை கணினி குலுக்கல் முறையில் தேர்வு செய்து ஒதுக்கீடு செய்யும் பணியினை மேற்கொண்டார்கள்.

38.அரக்கோணம் சட்டமன்ற தொகுதியில் 132 அமைவிடங்களில் அமைக்கப்படவுள்ள 250 வாக்குச்சாவடி மையங்களில் 55 காவலர்களும், 64 தலைமை காவலர்களும், 9 சிறப்பு துணை ஆய்வாளர்களும், 4 துணை ஆய்வாளர்களும், 39.சோளிங்கர் சட்டமன்ற தொகுதியில் 179 அமைவிடங்களில் அமைக்கப்படவுள்ள 299 வாக்குச்சாவடி மையங்களில் 140 காவலர்களும், 29 தலைமை காவலர்களும், 10 சிறப்பு துணை ஆய்வாளர்களும், 41.இராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் 136 அமைவிடங்களில் அமைக்கப்படவுள்ள 283 வாக்குச்சாவடி மையங்களில் 118 காவலர்களும், 15 தலைமை காவலர்களும், 3 சிறப்பு துணை ஆய்வாளர்களும், 42.ஆற்காடு சட்டமன்ற தொகுதியில் 160 அமைவிடங்களில் அமைக்கப்படவுள்ள 290 வாக்குச்சாவடி மையங்களில் 147 காவலர்களும், 7 தலைமை காவலர்களும், 3 சிறப்பு துணை ஆய்வாளர்களும், 3 துணை ஆய்வாளர்களும் என இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள 607 அமைவிடங்களில் அமைக்கப்படவுள்ள 1122 வாக்குச்சாவடி மையங்களில் 460 காவலர்களும், 115 தலைமை காவலர்களும், 25 சிறப்பு துணை ஆய்வாளர்களும், 7 துணை ஆய்வாளர்களும் பணிபுரியவுள்ளனர்.

# தேர்தல் நாளன்று வாக்களிக்க செல்லும் வாக்காளர்கள் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை பயன்படுத்த வேண்டும்: மாவட்ட கலெக்டர் அறிவிப்பு



தென்காசி, ஏப். 17

தென்காசி (தனி) பாராளுமன்றத் தொகுதிக்கான தேர்தல் 19.04.2024 அன்று நடைபெற உள்ளது. தேர்தல் நாளன்று வாக்களிக்க செல்லும் வாக்காளர்கள், 1951 ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 62 ஆம் பிரிவின் கீழ் அவர்களுடைய உரிமையை மிகவும் பயனுள்ள முறையில் பயன்படுத்துவதற்காக, வாக்காளர்கள் ஆள் மாறாட்டம் செய்யப்படுவதைத் தடுக்கிற நோக்கத்துடன், வாக்குப்பதிவின் போது, வாக்காளர்கள் தங்களுடைய அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான ஒரு வழியாக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை பயன்படுத்த வேண்டும்.

வாக்குப்பதிவு நடைபெறுகிற போது, வாக்காளர்கள் ஆள் மாறாட்டம் செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும், அவர்களுடைய அடையாளத்தை உறுதி செய்ய உதவுவதற்காகவும் அரசின் செலவில் வழங்கப்பட்டுள்ள வாக்காளர்களின் புகைப்படங்கள் அடங்கிய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க வேண்டும் என இதனால் உத்தரவிடுகிறது.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாத அத்தகைய வாக்காளர்கள், அவர்களின் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக, பின்வரும் மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் ஏதேனுமொன்றை அளிக்க வேண்டும்.

ஆதார் அட்டை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத்திட்டத்தின் பணி அடையாள அட்டை, புகைப்படத்துடன் கூடிய வங்கி/அஞ்சலக கணக்குப் புத்தகங்கள், தொழிலாளர் நல அமைச்சக திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு அட்டை, ஓட்டுநர் உரிமம், வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை ( ), தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட ஸ்மார்ட் அட்டை, இந்திய கடவுச்சீட்டு, புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், மத்திய / மாநில அரசுகள் /பொதுத்துறை நிறுவனங்கள் / வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள், பாராளுமன்ற / சட்டமன்ற மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை, இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட இயலாமைக்கான தனித்துவமான அடையாள அட்டை, வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையால் வாக்காளரின் அடையாளம் மெய்ப்பிக்கப்படுகின்ற போது, வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையிலுள்ள அச்சுப்பிழைகள் / எழுத்துப்பிழைகள் முதலியவற்றை பொருட்படுத்த தேவையில்லை. 1950 ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 20ஆம் பிரிவின் கீழ் பதிவு பெற்றுள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள், அவர்களின் கடவுச்சீட்டிலுள்ள விவரங்களை அடிப்படையாகக் கொண்டு, அவர்களின் அசல் கடவுச்சீட்டின் அடிப்படையில் மட்டுமே (வேறெந்த அடையாள ஆவணமும் அல்லாது) அவர்களின் அடையாளம் வாக்குச்சாவடியில் மெய்ப்பிக்கப்பட வேண்டும் என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்.

# மதுரையில் பறக்கும்படை கண்காணிப்பு பணிகளை தீவிரபடுத்துதல் தொடர்பான ஆய்வுக்கூட்டம்




மதுரை, ஏப். 17

தமிழ்நாடு மாநிலத்திற்கான சிறப்பு தேர்தல் செலவின பார்வையாளர் பி.ஆர். பாலகிருஷ்ணன், தலைமையில், மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் மா.சௌ. சங்கீதா, முன்னிலையில் நடைபெற்றது.

மதுரை மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு மாநிலத்திற்கான சிறப்பு தேர்தல் செலவின பார்வையாளர் பி.ஆர். பாலகிருஷ்ணன், தலைமையில், மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் மா.சௌ. சங்கீதா, முன்னிலையில், தேர்தல் வாக்குப்பதிவு நாளையொட்டி மாவட்டத்தில் பறக்கும்படை கண்காணிப்புபணிகளை தீவிரபடுத்துதல் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பறக்கும்படை கண்காணிப்பு பணிகளை தீவிரபடுத்துதல் தொடர்பாக ஆலோசிக்கப்பட்டதாவது:

மதுரை மாவட்டத்தில் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் 2024க்கான வாக்குப்பதிவு வருகின்ற 19.04.2024 அன்று நடைபெறவுள்ளது. வேட்பாளர்கள் தேர்தல் பரப்புரை செய்வதற்கான அவகாசம் இன்றுடன் நிறைவு பெறுகிறது. தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதிலிருந்து பறக்கும்படை குழுக்கள், நிலைத்த கண்காணிப்பு குழுக்கள், வீடியோ கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொடர்ந்து வாகன தணிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய ஆவணமின்றி கொண்டு செல்லப்பட்ட ரொக்கத் தொகைகள் பறிமுதல் செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் 3 தினங்கள் பறக்கும்படை குழுவினரின் கண்காணிப்பு பணிகளை மேலும் தீவிரப்படுத்திட வேண்டும். பொதுமக்கள் எவ்வித தூண்டுதலுமின்றி சுதந்திரமாக தங்களது வாக்குகளை பதிவு செய்யும் சூழ்நிலையை ஏற்படுத்துவது நம் அனைவரது கடமையாகும். கார்கள், சரக்கு வாகனங்கள், வங்கி ஏ.டி.எம் களில் பணம் நிரப்புவதற்கான வாகனம் என அனைத்துத் தரப்பு வாகனங்களையும் தீவிரமாக கண்காணித்து தணிக்கை மேற்கொள்ள வேண்டும். உரிய ஆவணமின்றி கொண்டு செல்லப்படும் ரொக்கத் தொகைகளை பறிமுதல் செய்திட வேண்டும். அதேபோல, வாக்காளர்களை கவரும் நோக்கில் கொண்டு செல்லப்படும் பரிசுப் பொருட்கள் தொடர்பாகவும் ஆய்வு செய்து பறிமுதல் செய்திட வேண்டும். மேலும், இணையவழி வங்கி பரிவர்த்தனைகளையும் கண்காணித்திட வேண்டும். சந்தேகத்திற்கு இடமளிக்கக் கூடிய வகையில் பெரும் தொகை பரிவர்த்தனை,, போன்ற செயலிகள் மூலம் ஒரே எண்ணிலிருந்து பல்வேறு எண்களுக்கு அனுப்பப்படும் தொகை, வேறு வேறு எண்களிலிருந்து குறிப்பிட்ட ஒரே எண்ணிற்கு அனுப்பப்படும் தொகை என சந்தேகத்திற்குரிய பரிவர்த்தனைகளை கண்காணித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல, மதுபான விற்பனை தொடர்பாக கண்காணித்திடவும், அதிகளவில் மொத்தமாக மதுபானம் வாங்குவோர் குறித்த விவரங்களை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

# சிவகங்கை மாவட்டத்தில் கலந்தாய்வுக்கூட்டம்



சிவகங்கை, ஏப். 17

சிவகங்கை மாவட்டம், பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2024 ஐ முன்னிட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தினால் தமிழகத்திற்கு நியமனம் பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு, இன்றைய தினம் சிவகங்கை மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, 31 சிவகங்கை பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட 06 சட்டமன்ற தொகுதிகளிலும், தேர்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் பார்வையாளர்கள் விரிவாக எடுத்துரைத்துள்ளனர்.

அதில், சிவகங்கை மாவட்டத்திலுள்ள மொத்தம் 1,873 வாக்குச் சாவடி மையங்களில், இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி 65 சதவீத வாக்குச்சாவடி மையங்களான மொத்தம் 887 வாக்குச்சாவடி மையங்களில் நேரடி கண்காணிப்பு கேமராக்கள் பொறுத்தப்பட்டு, நேரடி கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்தந்த சட்டமன்றத் தொகுதியில் தற்போது பாதுகாக்கப்பட்டு வரும் வாக்குப்பதிவு இயந்திரங்களை சம்மந்தப்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்பும் பணியினை பாதுகாப்பான முறையில் மேற்கொள்வதற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்பட்ட வங்கி பண பரிவர்த்தனைகளை கண்காணிக்கவும், பண பரிவர்த்தனையும், வங்கி கணக்குகளில் குறைவான அளவு பணங்களை அதிக பரிமாற்றங்கள் செய்வதை கண்காணிக்கவும் மற்றும் வங்கிகளின் வாயிலாக பணம் எடுத்துச் செல்லும் வாகனங்கள் மாலை 05 மணிக்கு மேல் உபயோகப்படுத்த கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேபோன்று, டாஸ்மாக் கடைகளில் மொத்தம் மற்றும் அதிகளவில் சில்லரை விற்பனைகளை கண்காணித்திடவும், காவல் துறையினரால் ஏற்படுத்தப்பட்டுள்ள வாகன சோதனைச்சாவடி மையங்களில் தீவிர வாகன சோதனைகளில் ஈடுபடவும், பறக்கும் படை ( ), நிலையான கண்காணிப்புக் குழு (), காணொலி கண்காணிப்புக் குழு ( ) ஆகியவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அலுவலர்கள், தீவிர கண்காணிப்பு பணிகளில் ஈடுபடவும், மேற்கண்ட குழுக்கள் வாயிலாக, தேர்தல் விதிமுறைகளின்படி, உரிய ஆவணங்களின்றி கைப்பற்றப்படும் அனைத்து விதமான நடவடிக்கைகளையும் அறிக்கையின் படி உடனடியாக சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், 247 என்ற அடிப்படையில் இயங்கி வரும் கட்டுப்பாட்டு அறையில் கட்டணமில்லா தொலைபேசி எண்களின் வாயிலாக பெறப்படும் புகார்கள் மற்றும் மூலம் பெறப்படும் புகார்கள் ஆகியவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், வேட்பாளர்களின் பல்வேறு செலவு கணக்குகள் தொடர்பாக, உரிய படிவங்கள் வாயிலாக இந்திய தேர்தல் ஆணையத்திற்கு குறிப்பிட்ட காலங்களில் அறிக்கையினை சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுபோன்று, பல்வேறு நிலைகளில் ஈடுபடுத்தப்பட்டு வரும் அலுவலர்கள்,

இந்திய தேர்தல் ஆணையத்தினால் விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளுக்குட்பட்டு, தங்களுக்கான பணியினை சிறப்பாக மேற்கொண்டு, வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி, சிறப்பான முறையில் 31சிவகங்கை பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தலை நடத்திட அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என சிறப்பு செலவின பார்வையாளர் பி.ஆர். பாலகிருஷ்ணன், தெரிவித்தார்.

# விருதுநகர் மாவட்டத்தில் வெற்றிலை, பாக்கு, தாம்பூலத்துடன், தேர்தல் திருவிழா: கலெக்டர்




விருதுநகர், ஏப். 17

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், கம்பிக்குடி ஊராட்சி, மந்திரி ஓடை கிராமத்தில் நரிக்குறவர் காலனியில் மக்களவை தேர்தல் 2024 முன்னிட்டு, 100 சதவிகிதம் வாக்குபதிவை வலியுறுத்தி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர், மாவட்ட கலெக்டர் ஜெயசீலன், தேர்தல் திருவிழா தேசத்தின் பெருவிழா அழைப்பிதழை வாக்களர்களுக்கு வழங்கி, ஏப்ரல்19 அன்று தவறாமல் வாக்களிக்க வருமாறு அழைப்பு விடுத்தார்.

விருதுநகர் மாவட்டத்தில், வருகின்ற மக்களவை தேர்தல் 2024 முன்னிட்டு 100 சதி விகித வாக்குபதிவை எட்டுவதற்காக நாள்தோறும் வாக்களார்களை கவரும் வகையில் அரசுத் துறை மூலமாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

அதன்படி, நேர்மையான மற்றும் 100 சதவிகிதம் வாக்குபதிவை வலியுறுத்தும் வகையில், மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் வீ.ப.ஜெயசீலன், தாம்பூல தட்டில் வெற்றிலை, பாக்குடன் தேர்தல் திருவிழா தேசத்தின் பெருவிழா அழைப்பிதழை மந்திரி ஓடை கிராமத்தில் நரிக்குறவர் காலனியில் வசிக்கும் 54 நரிக்குறவர் குடும்பங்களின் வீடுகளுக்கு நேரடியாக சென்று வழங்கி, ஏப்ரல் 19 அன்று குடும்பத்தில் உள்ள 18 வயது நிரம்பிய அனைவரும் தவறாமல் வாக்களிக்க வருமாறு அழைப்பு விடுத்தார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் சின்னத்துடன் தேர்தல் திருவிழா, தேசத்தின் பெருவிழா மக்களவைத் தேர்தல் 2024 என்ற முகப்பு வாசகங்களுடன் பனை ஓலையில் அச்சிடப்பட்டுள்ள இந்த அழைப்பிதழில்,

விருதுநகர் மக்களவை தொகுதி தேர்தல் திருவிழா அழைப்பிதழ்.

அன்புடையீர் வணக்கம். நிகழும் மங்களகரமான திருவள்ளுவராண்டு 2055 சித்திரை 6ம் நாள் (19.4.2024) வெள்ளிக்கிழமை நலம்தரும் நன்னாளில் காலை 7 மணி முதல் மாலை 6 மணிவரை இந்திய தேர்தல் ஆணையம் நடத்தும் பாராளுமன்ற மக்களவை தேர்தல் திருவிழா, தங்கள் அருகாமையில் உள்ள வாக்குச் சாவடியில் நடைபெறுகிறது. நாள் 19.04.2024 நேரம்: காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் என்ற வாசகங்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும், என் வாக்கு விற்பனைக்கு அல்ல, 100 சதவீதம் தவறாமல் வாக்களிப்போம், இந்திய தேர்தல் ஆணையத்தின் கைப்பேசி செயலிகள் குறித்த விவரங்கள், தேர்தல் தொடர்பான புகார்களுக்கு, தேர்தல் கட்டுப்பாட்டு அறை எண்கள் 04562 252100, 04562 221301, கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 425 2166, வாக்காளர் சேவை மையம் 1950 ஆகிய தகவல்களும் இந்த அழைப்பிதழில் இடம் பெற்றுள்ளன. எனவே 18 வயது பூர்;த்தி அடைந்த அனைவரும் வருகின்ற மக்களவை தேர்தல் 2024 ஏப்ரல் 19 அன்று தவறாமலும், பரிசுப்பொருட்கள், பணத்துக்கு ஆட்படாமல் நேர்மையாகவும் வாக்களிக்க வேண்டும் என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

# காவல்துறையும், கல்லூரி மாணவிகள் இணைந்து நடத்திய விழிப்புணர்வு பேரணி



ஒட்டன்சத்திரம், ஏப். 17

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் காவல் துறையும், அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் மற்றும் அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவிகள் இணைந்து நடத்திய நூறு சதவீதம் வாக்கு பதிவு விழிப்புணர்வு பேரணி ஒட்டன்சத்திரம் உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் முருகேசன் தலைமையில் வாக்களிப்பை உறுதிப்படுத்தவும் பொதுமக்கள் எவ்வித அச்சமின்றி அனைவரும் வாக்குச்சாவடிகளின் சென்று வாக்களிப்பது குறித்தும் விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி பேரணியாக ஒட்டன்சத்திரம் நகர் பகுதிகளில் ஊர்வலமாக சென்றனர்.

இப்பேரணியில் சார்பு ஆய்வாளர்கள் சவடமுத்து, ரஞ்சித், சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்லமுத்து, ஒட்டன்சத்திரம் கிராம நிர்வாக அலுவலர் பூ.கோவிந்தராஜ், பேராசிரியர்கள் யசோதா, யமுனா கிராம உதவியாளர்கள் மு.பைசல் முகமது, சொ. விஜயபாஸ்கரன் மற்றும் அரசு அலுவலர்கள், சமுக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மொத்த வாக்குச்சாவடிகளில் 65 சதவிகித வாக்கு சாவடிகள் கேமிரா பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படவுள்ளது: கலெக்டர் தகவல்



நாமக்கல், ஏப். 17

நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட கலெக்டர் ச.உமா தலைமையில், தேர்தல் பொதுப் பார்வையாளர் ஹர்குன் ஜித்கௌர் முன்னிலையில் மக்களவை பொதுத் தேர்தல் 2024 முன்னிட்டு நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மொத்த வாக்குச்சாவடிகளில் 65 சதவிகிதமான 1,060 வாக்குச்சாவடிகளில் கேமிரா பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படவுள்ளது குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட கலெக்டர் ச.உமா தெரிவித்ததாவது,

நாமக்கல் மாவட்டத்தில் 92.இராசிபுரம், 93.சேந்தமங்கலம், 94.நாமக்கல், 95.பரமத்தி வேலூர், 96.திருச்செங்கோடு மற்றும் 97.குமாரபாளையம் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளில் 687 வாக்குபதிவு மையங்களில் 1,628 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி அமைக்கப்பட்டுள்ள வாக்குபதிவு மையங்களில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில் 53 வாக்குப்பதிவு மையங்களில் 174 வாக்குச்சாவடிகள் பதற்றமான வாக்குச்சாவடிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

அதன்படி, 92.இராசிபுரம் சட்டமன்ற தொகுதியில் 8 வாக்குப்பதிவு மையங்களில் 19 வாக்குச்சாவடிகள், 93.சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதியில் 10 வாக்குப்பதிவு மையங்களில் 29வாக்குச்சாவடிகள், 94.நாமக்கல் சட்டமன்ற தொகுதியில் 5 வாக்குப்பதிவு மையங்களில் 18 வாக்குச்சாவடிகள், 95.பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதியில் 13 வாக்குப்பதிவு மையங்களில் 26 வாக்குச்சாவடிகள், 96.திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதியில் 8 வாக்குப்பதிவு மையங்களில் 33 வாக்குச்சாவடிகள், 97.குமாரபாளையம் சட்டமன்ற தொகுதியில் 9 வாக்குப்பதிவு மையங்களில் 49 வாக்குச்சாவடிகள் என மொத்தம் 53 வாக்கு பதிவு மையங்களில் உள்ள 174 வாக்குச்சாவடிகள் பதற்றமான வாக்குச்சாவடிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

65 சதவிகிதம் வாக்குச்சாவடிகளில் கூடுதலாக கேமிராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்க தேர்தல் ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 92.இராசிபுரம் சட்டமன்ற தொகுதியில் 170 வாக்குச்சாவடிகள், 93.சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதியில் 185 வாக்குச்சாவடிகள், 94.நாமக்கல் சட்டமன்ற தொகுதியில் 188 வாக்குச்சாவடிகள், 95.பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதியில் 165 வாக்குச்சாவடிகள், 96.திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதியில் 170 வாக்குச்சாவடிகள், 97.குமாரபாளையம் சட்டமன்ற தொகுதியில் 182 வாக்குச்சாவடிகள் என மொத்தம் 1,060 வாக்குச்சாவடிகளில் கேமிரா பொருத்தப்பட்டு தீவிரமாக கண்காணிக்கப்பட வுள்ளது. இவற்றில் 174 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை. 886 வாக்குச்சாவடிகள் சாதாரண வாக்குச்சாவடிகள் ஆகும்.

இப்பணிகளில் 1 மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பாளர், சட்டமன்ற தொகுதி வாரியாக தலா 1 ஒருங்கிணைப்பாளர் என மொத்தம் 6 நபர்கள், தலா 5 தொழில்நுட்ப மேற்பார்வையாளர்கள் என மொத்தம் 30 நபர்கள், வாக்குச்சாவடி நிலை தன்னார்வலர்கள் 268 நபர்கள் என மொத்தம் 320 நபர்கள் பணிகளை மேற்கொள்ள உள்ளார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட தகவல் அலுவலர் சிவக்குமார் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்

# பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2024ஐ முன்னிட்டு தேர்தல் செலவினங்கள் தொடர்பான ஆய்வுக்கூட்டம்




திண்டுக்கல், ஏப். 17

பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2024ஐ முன்னிட்டு, திண்டுக்கல் மாவட்டத்தில் தேர்தல் செலவினங்கள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாநில தேர்தல் செலவு கணக்கு சிறப்பு பார்வையாளர் பி.ஆர். பாலகிருஷ்ணன், தலைமையில், மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி, மற்றும் தேர்தல் செலவின கணக்கு பார்வையாளர் ஜரோன்தே விஷால் தஷ்ரத், ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவின்படி, பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2024ஐ முன்னிட்டு, தமிழகத்தில் வரும் 19.04.2024 அன்று வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது. அதை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டத்தில் தேர்தல் முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேர்தல் பணிகளை கண்காணிக்க பல்வேறு குழுக்கள் அமைத்து கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்கூட்டத்தில் உதவித் தேர்தல் அலுவலர்கள் உள்ளிட்ட தேர்தல் அலுவலர்களிடம் வேட்பாளர்கள் தேர்தல் செலவினம் தொடர்பான விபரங்களை மாநில தேர்தல் செலவு கணக்கு சிறப்பு பார்வையாளர் அவர்கள் கேட்டறிந்தார். வணிக நிறுவனங்களில் பொருட்கள் மொத்தமாக கொள் முதல் செய்யப்படுகிறதா, ஜிஎஸ்டி செலுத்தப்படுகிறதா என்பது குறித்து முறையாக கண்காணிக்கப்படுவதை வணிகவரித்துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

மது விற்பனையில் வழக்கமான தினசரி விற்பனை, ஒவ்வொரு மாதமும் விற்பனையாகும் மதுபானங்கள் அளவு ஆகியவற்றை கேட்டறிந்து, தேர்தல் நேரத்தில் மது விற்பனை அதிகரித்துள்ளதா, மதுபானங்கள் மொத்தமாக கொள்முதல் செய்யப்படுகிறதா என்பது குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

வங்கி கணக்குகளில் பெரிய அளவிலான தொகை பரிமாற்றம் நடைபெற்றதா, அடையாளம் தெரியாத யாராவது மற்ற நபர்களின் சேமிக்கு கணக்குகளில் குறிப்பிட்ட தொகையை தொடர்ந்து செலுத்துகின்றனரா என்பது குறித்து கண்காணிப்பு பணிகள் மேற்கொள்வது குறித்தும், பணம் பரிவர்த்தனையில் ஏதேனும் விதிமீறல்கள் நடைபெற்றுள்ளனவா என்பது குறித்தும் வங்கியாளர்களிடம் கேட்டறிந்தார்.

பத்திரிகைகள், தொலைகாட்சிகள் மற்றும் சமூக வலைதளங்களில் வேட்பாளர்கள் வாக்கு சேகரிப்பதற்காக வெளியிடும் விளம்பரங்கள் முறையாக கண்காணிக்கப்படுகிறதா, ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிடம் அனுமதி பெற்று விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றனவா, வேட்பாளர்கள் வெளியிடும் விளம்பரங்களுக்கான செலவுத்தொகை முறையாக கணக்கிடப்பட்டு வேட்பாளர் செலவு கணக்கில் சேர்க்கப்படுகிறதா என்பது குறித்து ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிடம் கேட்டறிந்தார்.

ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவினர் அளிக்கும் செலவினத்தொகை, உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் அளிக்கும் தேர்தல் செலவினத்தொகை ஆகியவற்றை கணக்கிட்டு, வேட்பாளர்கள் அளிக்கும் செலவின பட்டியலுடன் ஒப்பிட்டு முறையாக செலவு கணக்கை பராமரித்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு, மாநில தேர்தல் செலவு கணக்கு சிறப்பு பார்வையாளர் பி.ஆர்.பாலகிருஷ்ணன், அறிவுறுத்தினார்.



பாராளுமன்ற மக்களவை பொதுத்தேர்தல் 2024ஐ முன்னிட்டு தூத்துக்குடி பாராளுமன்ற மக்களவை பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளதை தொடர்ந்து கோவில்பட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடிகளில் தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான 2ம் கட்ட மறு பயிற்சி வகுப்பு நடைபெறும் மையமான கோவில்பட்டி நாடார் மேல்நிலைப் பள்ளியில் தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர், கலெக்டர் லட்சுமிபதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.




## "பார்ட்டி ஒன்னு தொடங்கட்டுமா.." வைரலாகும் 'GOAT'ஃபேர்ஸ்ட் சிங்கிள்

வெங்கட் பிரபு இயக்கத்தில் "தி கிரேட்டஸ்ட் ஆஃப் ஆல் டைம்" என்ற படத்தில் நடிகர் விஜய் நடித்து வருகிறார். ஏ.ஜி.எஸ். நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்குயுவன்ஷங்கர்ராஜாஇசையமைத்துள்ளார்.

கோட் திரைப்படம் வரும் செப்டம்பர் 5 ஆம் தேதி வெளியாகவுள்ளது. பாடலின்தலைப்பானவிசில் போடு தலைப்பை இன்று காலையில் வெளியிட்டனர் படக்குழுவினர். இப்பாடலை மதன் கார்கி வரிகளில் விஜய் பாடியுள்ளார்.

இந்நிலையில் பாடலின் லிரிக் வீடியோ யூடியூபில் வெளியாகியுள்ளது. "பார்ட்டி ஒன்னு தொடங்கட்டுமா ? கேம்பைன்ன தான் தொறக்கட்டுமா? என்ற வரிகளில் பாடல் தொடங்குகிறது. இப்பாடலில் இடம்பெற்றுள்ள வரிகள், விஜயின் அரசியல் பிரவேசத்தின் முன்னோட்டம் போல் காணப்படுகிறது.

பாடல் வீடியோவின் கடைசியில் விஜய், பிரபுதேவா, பிரசாந்த் மற்றும் அஜ்மல் ஆடிய நடனம் மிக எனர்ஜிடிக்காக இருந்தது. தமிழ் புத்தாண்டின் கொண்டாட்டம் இப்பாடலின் மூலம் ரசிகர்களிடையே இரட்டிப்பாகியிருக்கிறது.

இப்பாடலின் வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

## ரத்னம் படத்தின் டிரெயிலர் வெளியீடு




நடிகர் விஷால் அடுத்ததாக ஹரி இயக்கும் ரத்னம் படத்தில் நடித்துள்ளார்.ஜனவரி மாதம் இப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்ததை அடுத்து, வரும் ஏப்ரல் மாதம் 26ம் தேதி படம் வெளியாக உள்ளது. இயக்குநர் ஹரி எப்பொழுதும் வேகமாகவும் விறுவிறுப்பாகவும் அதனை காட்சி படுத்துவதில் ஆற்றல் பெற்றவர்.

ப்ரியாபவானி ஷங்கர், ராமச்சந்திர ராஜூ, சமுத்திரகனி, கவுதம் வாசுதேவ் மேனன், யோகி பாபு மற்றும் பல பிரபல நடிகர்கள் இந்த படத்தில் நடித்துள்ளனர். சில வாரங்களுக்கு முன்பு படத்தின் பாடலான 'டோண்ட் வரி டா மச்சி' மற்றும் 'எதனால' பாடல் வெளியானது.

வெளியான இரண்டு பாடல்களும் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இந்நிலையில் படத்தின் டிரெயிலர் நாளை வெளியாகும் என படக்குழுவினர் போஸ்டர் ஒன்றை பதிவிட்டுள்ளனர்.




## சாய் தன்ஷிகாவின் 'தி புரூப்' படம் மே 3 ல் 'ரிலீஸ்'

2006 ம் ஆண்டு வெளியான 'திருடி' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் சாய் தன்ஷிகா. ஜெயம் ரவி நடிப்பில் 2009 ஆண்டு வெளிவந்த பேராண்மை படத்தில் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்து மக்கள் கவனம் ஈர்த்தார்.

மாஞ்சா வேலு, நில் கவனி செல்லாதே, அரவான், பரதேசி போன்ற படங்களில் கதாநாயகியாக நடித்தார். பா.ரஞ்சித் இயக்கத்தில் 2016 ம் ஆண்டு வெளிவந்த 'கபாலி' படத்தில் ரஜினிகாந்தின் மகளாக நடித்தார். அதன் பின் துல்கர் சல்மானுடன் 'சோலோ' என்ற படத்தில் நடித்தார்.

இந்நிலையில் தற்போது 3 வருட இடைவெளிக்கு பிறகு 'தி புரூப்' என்ற படத்தில் ஆக்ஷன் ஹீரோயினாக தன்ஷிகா நடித்துள்ளார். கோல்டன் ஸ்டுடியோ 23 என்ற பட நிறுவனம் சார்பில் கோமதி சத்யா இப்படத்தை தயாரித்துள்ளார். இப்படத்தை ராஷிகா மாஸ்டர் இயக்கியுள்ளார்.

இப்படத்தில் அசோக், ரித்விகா, இந்திரஜா, ருத்வீர் வரதன், மைம் கோபி, ராஜ சிம்மன், அஷ்மிதா, மாரிமுத்து ஆகியோரும் நடித்துள்ளனர். படத்துக்கு ஆர்.கே.தீபக் இசையமைத்துள்ளார். சண்டைக்காட்சிகள் சுரேஷ் ஹார்ஸ் பாபு அமைத்துள்ளார். இப்படத்தின் டிரெயிலர் கடந்த சில தினங்களுக்கு முன் வெளியிடப்பட்டது. இதனை பிரபல நடிகர் சசிகுமார் இணைய தளத்தில் வெளியிட்டார். இப்படத்தில் 'ஆக்ஷன் மற்றும் சில நீதிமன்ற காட்சிகள் நிறைந்துள்ளன. தற்போது இந்த 'டிரெய்லர்' இணையதளத்தில் வைரலாகியது.

இந்நிலையில் தற்போது 'தி புரூப்' படத்தின் ரிலீஸ் தேதி குறித்து தயாரிப்பாளர்கள் அறிவித்துள்ளனர். படத்தின் வெளியீட்டு தேதியை குறிக்கும் விதமாக ஒரு போஸ்டரையும் வெளியிட்டுள்ளனர்.

இப்படம் வருகிற மே 3 ந் தேதி அனைத்து தியேட்டர்களிலும் 'ரிலீஸ்' செய்யப்படுகிறது. மேலும் இப்படம் தமிழ்,மட்டுமின்றி இந்தி தெலுங்கு மொழிகளிலும் 'டப்' செய்யப்பட்டு வெளியீடு செய்யப்பட உள்ளது.

## கங்குவா படக்குழுவினர் வெளியிட்ட புதிய போஸ்டர்




தென்னிந்திய திரையுலகில் புகழ்பெற்ற நடிகர் சூர்யா தற்போது 'கங்குவா' என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தை இயக்குனர் சிவா இயக்குகிறார்.

இதில், திஷா பதானி, பாபி தியோல், யோகி பாபு, ரெடின் கிங்ஸ்லி உட்பட பலர் நடிக்கின்றனர். இந்த படத்தின் இறுதி காட்சி படப்பிடிப்பு வேலைகள் முடிந்த நிலையில் தற்போது படத்தின் போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் தொடங்கி உள்ளன.

கங்குவா படத்தின் டீசர் சில வாரங்களுக்கு முன் வெளியாகியது. வெளியான குறுகிய நேரத்தில் பலக் கோடி பார்வைகளை பெற்றது. டீசரில் சூர்யா மிக அற்புதமாக நடித்து இருப்பார். இந்நிலையில் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு படக்குழுவினர் ஒரு புதிய போஸ்டரை வெளியிட்டுள்ளனர்.

அதில் இரு வேடங்களில் காணப்படுகிறார். ஒரு கதாப்பாத்திரம் கையில் கத்தியுடன் ஒரு பழங்கால வீரரைப் போல் காட்சியளிக்கிறார். அவருக்கு எதிரி மற்றொரு கதாப்பாத்திரம் இக்கால மனிதனைப் போல் கோட் சூட் அணிந்து கையில் துப்பாக்கியுடன் காணப்படுகிறார்.

எப்படிப்பட்ட கதைக்களத்துடன் இருக்கும் என பெரும் எதிர்பார்ப்பு ரசிகர்களுக்கிடையே உருவாகியுள்ளது. படம் இந்தாண்டு வெளியிடப்போவதாக கூறியுள்ளனர். தற்பொழுது கங்குவா படத்தின் போஸ்டர் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

## புதிய படத்தில் நடிக்கும் நிவினும் நயனும்



2023 ஆம் ஆண்டு ஷாருக்கான் நடிப்பில் வெளிவந்த ஜவான் திரைப்படத்தில் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்திருப்பார் நயன்தாரா. அவர் தமிழ், மலையாளம், தெலுங்கு, இந்தி என அனைத்து மொழிப் படங்களில் நடித்து வருகிறார்.

2019 ஆம் ஆண்டு தியான் ஸ்ரீனிவாசன் இயக்கத்தில் நிவின் பாலி மற்றும் நயன்தாரா இணைந்து நடித்த படம் 'லவ் ஆக்ஷன் டிராமா'. ஷான் ரகுமான் இத்திரைப்படத்திற்கு இசையமைத்து இருந்தார். படம் வெளியாகிய போது மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

தற்பொழுது நயன்தாரா மீண்டும் நிவின் பாலியுடன் இணைந்து 'டியர் ஸ்டூடண்ட்ஸ்' நடிக்கவிருக்கிறார். அறிமுக இயக்குனரான சந்தீப் குமார் மற்றும் ஜார்ஜ் பிலிப் இயக்குகிறார்கள்.

பாலி ஜூனியர் மற்றும் ரவுடி பிக்சர்ஸ் இணைந்து இப்படத்தை தயாரிக்கவுள்ளது. நயன்தாரா இப்படத்தில் நடிக்க போகிறார் என்பதை படக்குழுவினர் ஒரு வீடியோவின் மூலம் தெரிவித்திருக்கின்றனர். அதில் பேப்பரில் இங்க் ஊற்றி நயந்தாராவின் புகைப்படம் தெரிகிறது. இந்த வீடியோவை நிவின் பாலி அவரின் எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

## சியான் 62 : விக்ரமின் 2 தோற்றம் புது அப்டேட்




தமிழ் பட உலகில் முன்னணி நடிகர்களில் ஒருவராக விக்ரம் திகழ்ந்து வருகிறார். 'சேது' படம் மூலம் புகழ் பெற்ற அவர் தொடர்ந்து பல வெற்றிப்படங்களை கொடுத்தார். இதில் 'தில்', தூள், சாமி, அந்நியன் படங்கள் ரசிகர்களிடம் பெரும் வரவேற்பு பெற்றன.

தற்போது பா.ரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் 'தங்கலான்' என்ற படத்தில் நடித்து வருகிறார். அவரது ரசிகர்கள் இந்த படத்தை ஆவலுடன் எதிர்பார்த்து காத்து இருக்கின்றனர்.

இந்நிலையில், 'சித்தா' பட புகழ் எஸ்.யு.அருண் குமார் இயக்கத்தில் ''சியான் 62' தற்காலிகமாக பெயரிடப்பட்ட புதுப்படத்திலும் விக்ரம் நடித்து வருகிறார். இதில் நடிகர் எஸ்.ஜே.சூர்யா, மலையாள நடிகர் சுராஜ் வெஞ்சரமூடு ஆகியோர் இணைந்து நடிக்கின்றனர். இப்படத்துக்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைக்கிறார். சியான் 62' படத்தை ரியா ஷிபுவின் எச்.ஆர் பிக்ச்சஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இப்படத்தின் படப்பிடிப்பு ஏப்ரல் 22 ந்தேதி தொடங்க உள்ளது. இப்படத்தின் டைட்டில் 'ப்ரோமோ' விக்ரமின் பிறந்த நாளான ஏப்ரல் 17 ந் தேதி வெளியாக உள்ளது. இந்நிலையில் இதில் விக்ரம் தாடியுடன் கூடிய தோற்றத்தில் காட்சியளிக்கிறார். அது ரசிகர்கள் மத்தியில் வரவேற்பு பெற்று உள்ளது. இதுதவிர மேலும் ஒரு தோற்றத்தில் விக்ரம் நடிக்க உள்ளார். இப்படத்தில் 'பிளாஷ்பேக்' போர்ஷனில் ஒரு கெட்டப்பிலும், கரண்டில் ஒரு கெட்டப்பிலும் விக்ரம் தோன்றுகிறார் என தற்போது தகவல் வெளியாகி உள்ளது.

## மேட்ச் பிக்சிங் செய்ததா மும்பை? கம்மின்ஸிடம் டாஸ் குறித்து பேசிய டு பிளெசிஸ் வைரலாகும் வீடியோ



ஐபிஎல் தொடரில் நேற்றைய போட்டியில் ஆர்சிபி ஐதராபாத் அணிகள் மோதின. இந்த போட்டியில் ஐதராபாத் அணி 25 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த போட்டி துவங்குவதற்கு முன்னதாக டாஸ் போடும் இடத்திற்கு வந்த டு பிளெசிஸ் கடந்த மும்பை அணிக்கு எதிரான போட்டியின் போது டாஸ் போடும் போது எவ்வாறு தான் ஏமாந்தேன் என்பது குறித்து பேட் கம்மின்ஸ்ஸிடம் கூறுவது போல சில செய்கைகளை வெளிப்படுத்தியிருந்தார். அது குறித்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

அதில், கடந்த போட்டியின் போது என்ன நடந்தது தெரியுமா? டாஸ் போடுவதற்காக காயினை சுண்டி விட்டார்கள். அப்போது அந்த காயின் கீழே விழுந்த பின்னர் அப்படியே அந்த காயினை திருப்பி எடுத்து கொடுத்து என்னிடம் தோற்று விட்டதாக காட்டினார்கள் என்பது போன்று செய்கையை செய்து காட்டி விளக்கம் கொடுத்தார். இதனை கேட்ட கம்மின்ஸ் சிரித்தவாறு அதனை கவனித்துக் கொண்டிருந்தார்.

வான்கடே மைதானத்தில் அவர்கள் கடைசியாக விளையாடிய போட்டியின் போது ஹர்திக் பாண்ட்யா மற்றும் டு பிளெசிஸ் ஆகியோர் டாஸ் போடுவதற்காக மைதானத்திற்கு வந்தனர்.

அப்போது டாஸ் போடும் நிகழ்வும் நடைபெற்றது. ஆனால் டாஸ் விழுந்த பின்னர் அந்த காயினை எடுத்த நடுவர் ஸ்ரீநாத் மும்பை அணிக்கு ஆதரவாக காயினை திருப்பி காண்பித்து டுபிளிசிஸ் டாசில் தோல்வி அடைந்ததாக ஏமாற்றினார். இதுகுறித்த சில வீடியோக்கள் சமூக வலைதளத்தில் வைரலானது குறிப்பிடத்தக்கது. அதோடு எப்போதுமே மும்பை அணி வான்கடே மைதானத்தில் விளையாடும் போது அவர்களுக்கே முடிவுகள் சாதகமாக இருப்பதாகவும் ரசிகர்களும் அந்த தவறுகளை சுட்டிக்காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்து முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் அன்டர்வுட் மரணம்



இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஆகச்சிறந்த சுழற்பந்து வீச்சாளராக வர்ணிக்கப்பட்ட டேரக் அன்டர்வுட் உடல்நலக்குறைவால் நேற்று மரணம் அடைந்தார். அவருக்கு வயது 78. இடக்கை சுழற்பந்து வீச்சாளரான அன்டர்வுட் 1966 முதல் 1982ம் ஆண்டு வரை 86 டெஸ்டில் விளையாடி 297 விக்கெட்டுகள் கைப்பற்றி உள்ளார். இங்கிலாந்து அணிக்காக டெஸ்டில் அதிக விக்கெட் வீழ்த்தி இருக்கும் சுழற்பந்து வீச்சாளர் இவர் தான். அத்துடன் 26 ஒரு நாள் போட்டிகளில் 32 விக்கெட் எடுத்துள்ளார். முதல்தர கிரிக்கெட்டில் மொத்தம் 2,465 விக்கெட் (676 ஆட்டம்) வீழ்த்தினார்.

1976,77ம் ஆண்டு இந்தியாவில் நடந்த தொடரின் போது அன்டர் வுட்டின் சிறப்பான பந்து வீச்சால் (29 விக்கெட்) 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இங்கிலாந்து 31 என்ற கணக்கில் வென்றது அவரது கிரிக்கெட் வாழ்க்கையில் முக்கியமான வெற்றிகளில் ஒன்றாகும்.

இந்திய ஜாம்பவான் சுனில் கவாஸ்கருக்கு எப்போதும் அச்சுறுத்தலாக விளங்கிய அன்டர்வுட், அவரது விக்கெட்டை மட்டும் டெஸ்டில் 12 முறை கபளீகரம் செய்திருக்கிறார். இவரது பந்து வீச்சில் தான் கவாஸ்கர் அதிக முறை ஆட்டமிழந்து இருக்கிறார் என்பது நினைவு கூரத்தக்கது. 'ஸ்டம்பை குறி வைத்து துல்லியமாக பந்து வீசக்கூடியவர். எந்த சூழலிலும் அவரது பந்து வீச்சை எதிர் கொள்வது கடினம்' என்று கவாஸ்கர் சமீபத்தில் கூறியிருந்தார்.

## பந்து வீச்சில் அரை சதம் விளாசிய 4 பவுலர்கள்: டி20யில் மோசமான சாதனை படைத்த ஆர்சிபி



ஐபிஎல் 2024 டி20 தொடரில் நேற்று நடைபெற்ற 30வது லீக் போட்டியில் பெங்களூரு ஐதராபாத் அணிகள் மோதின. இந்த போட்டி பெங்களூருவில் உள்ள சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. இதில் முதலில் பேட்டிங் செய்த ஐதராபாத் 20 ஓவரில் 3 விக்கெட்டுகளை இழந்து 287 ரன்கள் குவித்தது.

அந்த அணிக்கு அதிகபட்சமாக டிராவிஸ் ஹெட் 102 எடுத்தார்.அதைத் தொடர்ந்து ஆடிய பெங்களூரு அணிக்கு நம்பிக்கை நட்சத்திரம் விராட் கோலி 42, கேப்டன் டு பிளேஸிஸ் 62, தினேஷ் கார்த்திக் 83 ரன்கள் அடித்து போராடினார்கள்.

ஆனாலும் இதர வீரர்கள் பெரிய ரன்கள் எடுக்க தவறியதால் 20 ஓவரில் பெங்களூரு 7 விக்கெட்டுகளை இழந்து 262 ரன்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. இந்நிலையில் இந்த போட்டியில் பல சாதனைகள் படைக்கப்பட்டது. இப்போட்டியில் 287 ரன்களை குவித்ததன் மூலம் ஐபிஎல் தொடரில் அதிக ரன்கள் குவித்த அவர்களின் முந்தைய சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்தது ஐதராபாத்.

அதே போல 262 ரன்கள் அடித்த பெங்களூரு ஐபிஎல் தொடரில் சேசிங்கில் அதிக ரன்கள் அடித்த அணி என்ற சாதனையை படைத்து தோல்வியை சந்தித்தது. அந்த வகையில் இரு அணிகளும் சேர்ந்து இப்போட்டியில் மொத்தம் 549 ரன்கள் அடித்தன. இதன் வாயிலாக அதிக ரன்கள் குவிக்கப்பட்ட டி20 போட்டி என்ற உலக சாதனையை இப்போட்டி படைத்துள்ளது.

அந்தப் பட்டியல்:

1. 549 ரன்கள்: ஐதராபாத் பெங்களூரு, பெங்களூரு, 2024★

2. 523 ரன்கள் : ஐதராபாத் மும்பை, ஐதராபாத் 2024

3. 517ரன்கள்: வெஸ்ட் இண்டீஸ் தென் ஆப்பிரிக்கா, சென்சூரியன், 2023

மேலும் இப்போடியில் ஐதராபாத் 22, பெங்களூரு 16 என 2 அணிகளும் சேர்ந்து மொத்தம் 38 சிக்சர்கள் அடித்தனர். இதன் வாயிலாக அதிக சிக்சர்கள் அடிக்கப்பட்ட டி20 போட்டி என்ற உலக சாதனையை இப்போட்டி சமன் செய்தது. இதற்கு முன் இதே சீசனில் ஹைதெராபாத் மும்பை அணிகள் மோதிய போட்டியிலும் 38 சிக்சர்கள் அடிக்கப்பட்டது.

அத்துடன் இந்த போட்டியில் 2 அணிகளும் சேர்ந்து 43 பவுண்டரிகள் 38 சிக்சர்கள் என மொத்தமாக 81 பவுண்டரிகள் அடித்தன. இதன் வாயிலாக அதிக பவுண்டரிகள் அடிக்கப்பட்ட டி20 போட்டி என்ற உலக சாதனையையும் இப்போட்டி சமன் செய்துள்ளது. இதற்கு முன் 2023 சென்சூரியனில் வெஸ்ட் இண்டீஸ் தென் ஆப்பிரிக்கா அணிகள் மோதிய போட்டியிலும் 81 பவுண்டரிகள் அடிக்கப்பட்டுள்ளது.



யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

விளக்கம்:

காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்கா விட்டாலும் நாவையாவது காக்க வேண்டு'ம்; காக்கத் தவறினால் சொற்குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.